---

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மொரட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன்

தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்படுகின்ற கூட்டுத்தொகையான ரூபா 1,251,747 மற்றும் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகையான ரூபா 4,967,589 கடன்கொடுத்தோர் மீதி என்பவற்றை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு நிறுவகத்திற்குச் சொந்தமாக போதியளவான நிதி காணப்படவில்லை. | தாமதமின்றி கடன் கொடுத்தோருக்கு செலுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18,959,131 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 24,900,166 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 5,941,035 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 51,733,000 இனாலும், ஏனைய வருமானம் ரூபா 7,599,668 இனாலும் அதிகரித்திருந்ததுடன் ஒப்பிடும் போது ஆளணி சம்பள செலவினங்கள் ரூபா 45,070,187 இனால் அதிகரித்துச் சென்றமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

கடந்த ஆண்டில் ரூபா 1,191,481,015 ஆன ஒட்டுமொத்த வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 557,759,632 வரை 52 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அவ்வாறே கடந்த ஆண்டின் செலவினம் ரூபா 1,216,381,181 ஆன செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 576,718,763 அதாவது கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 52 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் 0.73:1 மற்றும் விரைவு விகிதம் 0.64:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அந்த விகிதம் முறையே 0.68:1 மற்றும் 0.56:1 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் சாதகமான நிலைமையிலும், விரைவு விகிதம் பாதகமான நிலைமையிலும் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | தொழில்நுட்ப நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட காணியை கையேற்பதற்கு ரூபா 25,000,000 தொகை 2007 ஆம் ஆண்டின் போது இலங்கை ஒலிபரப்புக் | மிகுதிப் பணம் அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படாதிருந்ததுடன் அதன் பின்னர் உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய அதிகாரம் பெற்ற நிறுவனங்களின் மூலம் தொழில்நுட்ப | காணியின் சட்டரீதியான உரித்தை விரைவாகப் பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டின் போது இந்தக் காணியின் உரித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு நீங்கியிருந்தமையினால் செலுத்தப்பட்ட ரூபா 25,000,000 ஆன முற்பணம் சிக்கனமற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. மேலும் இந்தக் காணியின் சட்டரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்தது. | நிறுவனத்தை மீண்டும் ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. காணியின் உரித்தை தீர்த்து வைக்குமாறு ஹோமாகம பிரதேச செயலாளருக்கு 2022.02.02 மற்றும் 2022.05.06 ஆந் திகதிகளில் கடிதம் மூலம் கோரப்பட்டிருந்தது. உரிய சகல தரப்பினரிடமும் கலந்துரையாடல் ஒன்று 2022.03.03 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன் உரிய நடவடிக்கைகளை பூர்த்திசெய்து நிறுவனத்திற்கு உரித்தை கையளிக்குமாறு அறிவித்து 2023.03.13 ஆந் திகதி மீண்டும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 07 நிதியங்களில் காணப்படுகின்ற கூட்டுத்தொகையான ரூபா 24,711,780 தொகை 01 வருடம் முதல் 11 வருடங்கள் வரையிலான காலம் உரிய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | இந்த காலத்தில் உரிய நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு உரிய பிரிவுகளில் கோரிக்கைகள் கிடைக்காதிருந்ததுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலக்குகளுக்கு புறம்பாக அவற்றை பயன்படுத்த முடியாதிருந்தமையால் அவ்வாறு காணப்படுகின்றது. | நிதியத்தின் பயன்பாடு தொடர்பான நிபந்தனை கால ரீதியில் மீளாய்வு செய்து பயன்படுத்தப்படாத நிதியத்தைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழில்நுட்ப நிறுவனத்தை மீண்டும் ஸ்தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 2017 இல் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்ட ரூபா 8,821,053,785 பெறுமதியான கட்டிடத்தில் உள்ள மாணவர் விடுதியின் 02 கட்டிடங்களில் 26 அறைகள் வீதம் 02 மாடிகளை நிர்மாணிப்பதற்கும், நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளில் அறைகளைப் பிரித்தல், அந்த 02 கட்டிடங்களிலும் கூரைகளை நிர்மாணித்தல் முழுமையாக கைவிடப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட அறைகளுக்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட தளபாட உபகரணங்களும் வழங்கப்படாமல் முன்னாள் தொழில்நுட்ப நிறுவகத்தின் மற்றும் செயற்திட்டத்தின் பணிப்பாளரால் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடமாக 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாண நிறுவனத்திற்கு விலகுவதற்கான சான்றிதழ் விநியோகித்து கட்டிடம் கையேற்கப்பட்டிருந்தது. | உரிய விடுதிக்கட்டிடத் தொகுதியில் பூர்த்தி செய்யப்படாத நிர்மாணங்கள் (G மற்றும் H விடுதிகள்) 2020.12.01 ஆந் திகதி நிறுவகத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழுவினால் முன்னாள் இருந்த உரிய அதிகாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய அதிகாரத் தரப்பினரால் அது தொடர்பாக ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் அது தொடர்பாக எந்தவொரு பதிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக நிறுவக மட்டத்தில் எடுக்கக்கூடிய | பூர்த்தி செய்யப்படாதுள்ள நிர்மாணங்களை விரைவாக பூர்த்தி செய்து நிறுவகத்தின் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டிடம் நிறுவனத்திற்கு கையேற்கப்பட்ட 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டின் பெப்ரவரி வரையும் அந்த கட்டிடத்தின் கூரை நிர்மாணிக்கப்படாதிருந்தமையால் நீண்ட காலம் முதல் காலநிலை தாக்கங்களுக்கு முகம் கொடுத்தமையின் காரணமாக கட்டிடங்களில் ஏனைய கட்டமைப்பு பகுதிகளுக்கும் பாதிப்பு ஏற்படும் அபாயம் காணப்பட்டது. | நடவடிக்கைகளைக் கண்டறிவதற்கு முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களை உடைய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பாடநெறிகளுக்காக மாணவர்களைத் தெரிவு செய்தல் மற்றும் தகுதிப் பரீட்சைகளுக்காக கட்டணம் செலுத்துவதற்காக முறையான திட்டயொன்று தயாரித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாமல் சுய நிதிஈட்டல் செயற்பாடுகளாக 2016 மார்ச் 01 ஆந் திகதிய இலக்கம் 04/2016 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விநியோகித்த சுற்றறிக்கையின் பிரகாரம் பாடநெறி விண்ணப்பத்திர வருமானம் தொடர்ச்சியாக ஊழியர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கு உரியதாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பத்திர வருமானத்தில் ரூபா 6,195,437 தொகையை பகிர்ந்தளிப்பதற்காக நடைமுறைப் பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | விண்ணப்பிக்கின்ற 4500 மாணவர்களில் தகுதியான விண்ணப்பத்தாரர்களைத் தெரிவு செய்தல் சில மாதங்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இதற்கு மேலதிகமாக சேவைகளுக்காக ஏற்படுகின்ற கொடுப்பனவுகளுக்கு உரிய பணம் மாத்திரம் நடைமுறை பொறுப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. இது எந்தவொரு சுய நிதிஈட்டல் நடவடிக்கையாக இனங்காண முடியாதிருந்ததுடன் அதில் பல்வேறு நிதியங்களுக்காக (உதாரணம்:- பணிப்பாளர் நிதியம்) ஒதுக்கங்களுக்கு மாத்திரம் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 04/2016 இன் சதவீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. | சுயமாக நிதிஈட்டல் நடவடிக்கைகளுக்காக வழிகாட்டி சுற்றறிக்கை இலக்கம் 04/2016 இன் பிரகாரம் மேலதிக நேரத்தை செலவிடுகின்ற குறித்துரைத்த ரீதியில் இனங்கண்டு அவைகளுக்காக விஷேட கொடுப்பனவு முறைமை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிரயம் ரூபா 205,322,908 ஆன கடைத்தொகுதி மற்றும் விருந்தினர் விடுதி என்பன 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கடைத்தொகுதியில் 13 கடைகளில் 05 கடைகள் 2018 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | பல்வேறு முறைமைகள் மூலம் விண்ணப்பதாரர்கள் ஆர்வம் காட்டியிருந்த போதிலும் இடத்தின் அமைவிடம் காரணமாகவும், கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமையால் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும் கடைகளை பெறுபவர்கள் முன்வந்திருக்கவில்லை. சமர்ப்பித்த விண்ணப்பதாரர்களும் பொருளாதார நலன்கள் இல்லாதிருந்ததாக காண்பித்து விலகிச் சென்றனர். கடைகளுக்காக பொருத்தமான விண்ணப்பதாரர்களைக் கண்டறிவதற்கு | குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களைப் பயன்படுத்துவதற்காக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

நிறுவகம் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கின்றது.

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியில் காணப்படுகின்ற 14 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போது 94 வெளிவாரி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டு விரிவுரைக் கட்டணமாக ரூபா 9,297,282 செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக பதவியணியினர் வழங்கவேண்டியமைக்கு ஆளுகைச் சபையினதும், பல்கலைக்கழகம் மானியங்கள் ஆணைக்குழுவினதும் பரிந்துரை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம் ஊழியர்களை சேர்த்துக்கொள்ள முடியாதிருந்தமையால் கல்விசார் நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்கு வெளிவாரி விரிவுரையாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். அவர்களின் சேவைக் கால மணித்தியால எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெறப்படுமாயின் வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக ஏற்படுகின்ற செலவினங்களைக் குறைக்க முடியும். | தேவைகளுக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |